1989 நவம்பர் 1] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

களை, அவர்கள் வேலைக்குத் தொடர்ந்து செல்வதற்கு 'பிரின்சிபிள் எம்ப்ளாயர்' என்கிற நிறுவனம் மறுக்கிறது என்றும், இது தொடர்பாக அரசாங்கம் தலையிட்டு, பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தொழிலாளர் நலத்துறை செயலாளர் (லேபர் செகரட்டரி) 3 கட்ட பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இன்னும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு இணக்கமான முடிவை அவர்கள் ஏற்படுத்துவார்கள். இல்லையென்றால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) தீப்பெட்டித் தொழில்களுக்கு ஏற்கெனவே இருந்த கலால் வரி வித்தியாசத்தைத் திரும்ப நடைமுறைப்படுத்த வேண்டுமென்று பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தின் மீது மத்திய அரசு எடுத்த நடவடிக்கை.

திரு. பெ. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது, தமிழகத்தில் இருக்கிற "ஹேண்டு-மேடு செக்டாரில்" தயாரிக்கப்படுகிற கைவினைத் தீப்பெட்டித் தொழில் நசிந்து போகக் கூடிய அளவுக்கு மத்திய அரசினுடைய வரவு-செலவு திட்டத்திலே "விம்கோ" என்ற பன்னாட்டு கம்பெனிக்கு அளிக்கப்பட்ட வரிச் சலுகையை மாற்றியமைக்க வேண்டும் என்று இங்கே இருக்கிற அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து, ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி, மத்திய அரசுக்கு மாநில அரசின் சார்பில் அனுப்பியிருக்கிறோமே, அதற்கு இதுவரை ஏதாவது பதில் வந்ததா?

சிவகாசி, சாத்தூரிலிருந்து ஓசூர் வரை தமிழகத்தில் பரவலாக குறைந்தபட்சம் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இன்றையதினம் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்த 'டி' கிளாஸ் பேக்டரிகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. ஒரே ஒரு கம்பனிக்காக இத்தனை தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இதற்கு ஏதாவது பதில் வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1989 நவம்பர் 1

* மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட அந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்றும், மத்திய அரசு எடுத்த முடிவை மாற்றிக் கொள்வதற்கில்லை என்றும், ஆகஸ்ட் மாதமே மத்திய அமைச்சர் எனக்குத் தகவல் தெரிவித் திருக்கிறார்கள்.

(ஈ) வன்னியர் சங்கத்தினர் கிளர்ச்சியின்போது போடப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிவாரணம் அளித்தல்.

* திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வன்னியர் போராட்டத்திலே சாலை மறியலில் ஈடுபட்ட பலபேர் துப்பாக் கிச்சூட்டில் இறந்திருக்கிறார்கள். பலபேர் பல வழக்குகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து பல பேரில் வழக்கு மன்றத்தில் வழக்குகள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பிறகு, அந்த வழக்குகளையெல்லாம், தகுதியின் அடிப்படையில் பரிசீலனை செய்து, திரும்பப் பெறலாம் என்று சொன்னார்கள். அதோடு, துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்களுக்கு அப்போதிருந்த அரசாங்கம் ரூ. 5,000 உதவித்தொகையாக வழங்குவதாக இருந்தது. அது வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். மேலும் காஞ்சிபுரத்தில் உள்ள காஞ்சிப் பெரியவர் அவர்கள்கூட, இவர்களுக்கு கொஞ்சம் பணம் கொடுக்கலாம் என்று சொல்லி, ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000 ரூ. 5,000 என்று சொல்லியிருக் கிறார்கள். அந்தப் பணம் அரசாங்கத்தில்தான் இருப்பதாகத் தெரிய வருகிறது.

தற்போது இனக் கலவரத்தில் இறந்தவர்களுக்கு ரூ. 25,000 கொடுக்கலாம் என்று இப்போதுள்ள அரசு அனுமதி கொடுத்

(11-50)

திருக்கிறது. அப்போது அந்தத் துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் களின் குடும்பங்கள் பணம் வாங்க மறுத்துவிட்டார்கள். இப்போது கொடுத்தால் வாங்கிக்கொள்வதாக அரசாங்கத் திற்கு கடிதங்கள் எழுதி அனுப்பி இருப்பதாகத்